**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், செங்கல்பட்டு**

**OS.No.98/2018 P.W.1**

(சாட்சிக்கு திரு.V.பிரதாப், உதவியாளர் அவர்களால் சாட்சி பிரமாணம் செய்யப்பட்து.)

| | |
|---|---|
| பெயர் | லத்தீப் |
| த/பெ. | அனிபா |
| வயது | 51 |
| வசிப்பிடம் | புதிய மசூதி தெரு, கோவளம், சென்னை |
| தொழில் | பாதுகாப்பு வேலை |

**முதல் விசாரணை 30.01.2026**

நான் இந்த வழக்கில் வாதியின் அதிகார முகவர். இன்று இந்த வழக்கில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் தெரியும். அதில் உள்ள சங்கதிகள் தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். 22.06.1999 அன்று 1ம் பிரதிவாதி சரோஜா ராமநாதன் என்பவருக்கு எழுதி கொடுத்த ஒளி நகல் வா.சா.ஆ.1 மேற்படி ஒளிநகல் 24.11.2025 தேதியிட்ட இந்நீதிமன்ற உத்தரவுபடி 2ம் நிலை சான்றாக குறியீடு செய்யப்படுகிறது. 03.03.2004 அன்று 1ம்பிரதிவாதிக்கு நந்தினி எழுதி கொடுத்த கிரய பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2. 10.04.2017 வாதிக்கும் முதல் பிரதிவாக்கும் ஏற்ப்பட்ட கிரய ஒப்பந்தத்தின் அசல் வா.சா.ஆ.3. 28.03.2018 இரண்டாம் பிரதிவாதிக்கு 1ம் பிரதிவாதி எழுதி கொடுத்த கிரய பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.4. 28.03.2018 3ம் பிரதிவாதி மற்றும் 4ம் பிரதிவாதி ஆகியோருக்கு 1ம் பிரதிவாதி எழுதிக் கொடுத்த கிரயப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.5. 11.04.2018 வழக்கு அட்டவணை சொத்துக்கான வில்லங்கச்சான்றின் பதிவிறக்க நகல் வா.சா.ஆ.6. 12.04.2018 தேதியிட்ட

1ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட பட்டாவின் பதிவிறக்க நகல் (இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 65 Bன் கீழ் சான்று இணைக்கப்பட்டுள்ளது) வா.சா.ஆ.7. 17.04.2018 வழக்கு அட்டவணை சொத்தை பொறுத்து பெறப்பட்ட வில்லங்க சான்றின் நகல் வா.சா.ஆ.8.

(வழக்கு குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது)